# செவ்வியல் சமயதெய்வ வழிபாட்டில் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள்

**மு. கலியாணிகுமார்**
2/55 கிழக்கு தெரு
பண்டாரம்பட்டி
தூத்துக்குடி

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

நாட்டார் தெய்வங்களின் பண்புக்கூறுகளை பட்டியிலிடுவதற்கு முன்பாக அவை விளங்கி வரும் சமயச் சூழல், பண்பாடு வரலாற்றுப் பின்னனிகளை அறிந்துகொள்ள வேண்டும் அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் செவ்வியல் சமய தெய்வ வழிபாட்டில் நாட்டார் பண்பாடு கூறுகளும், நாட்டார் தெய்வ வழிபாட்டில் செவ்வியல்தன்மைகளும் காண முடிகிறது. வைணவ ஆச்சாரியர்களில் தனிச்சிறப்புக்கு உரியவரான இராமானுஜர் வைணவ வழிபாட்டு முறைகளை ஒழுங்குபடுத்தினார். பஞ்சமர்க்கும் கோயில் வழிபாட்டில் இடமுண்டு என்று சொன்னார். தமிழ்நாடு வைணவம் சாதிக் கோட்பாட்டைப் புறந்தாள்ளிவிட்டு எளிய மக்களிடையே தங்கள் மதத்தை நிறுவ முயன்றிருப்பது தெரிகிறது. தமிழ்நாடு வைணவ அடித்தள மக்களின் மரபுகள் வேதமரபுக்கு மாற்று மரபாகக் கொண்டுள்ளன.

### சமய சீர்திருத்தம்

இராமானுசரின் சமத்துவ போக்கிற்கு இன்னொரு செய்தியையும் குறிப்பிட வேண்டும். திருவரங்கத்திற்கு வெளியே வாழ்ந்த தீண்டாதார் வகுப்பைச் சார்ந்த பக்தர் ஒருவர் ஆழ்வார்களின் பாடல்களைப் பாடி மகிழும் செய்தியை இராமானுசர் அறிந்தார். அவர் பாடலைக் கேட்டு பரவசமுற்றார். முன்வினைப் பயனாகவே பிறப்பில் உயர்வும் தாழ்வும் அமைகின்றனது என்பதை ஏற்க மறுத்தார் இராமானுசர் தீண்டாதார் என்னும் பெயரை ஒழித்துத் திருக்குலத்தார் எனப் பெயரிட்டார்.

வைணவம் தழுவிய நாட்டார் கூறுகள் பெருமாளைத் தலைமையாகக் கொண்டு சங்கு, சச்சரத்துடன் தோற்றம் கொடுக்கிறது. இங்கு வைணவக்கடவுள் பெருமாளின் அவதாரமாக கையில் சங்கு சக்கரத்துடன் காட்சி தருகிறார். துளசிமாலையும், திருமண்ணும் அடையாளமாக இருப்பதைக் காண முடிகிறது.

**திருமணிமாலை**

**திருமணி என்ற போர்க்குச் செல்வமும் பெரு உண்டாம்**
**திருமணி நாவில் வைத்தால் தீவினை அனுகாதேடும்**
**திருமணி சில வைத்தால் சிவபக்திச் சுபிட்சம் உண்டாம்**
**திருமணி என்ற போர்க்குச் செயமுடன் சுவர்க்கும் தானே**
**ஹரி ஓம் நமோ ராமானு ஐம்**

**வணங்குதல்**

**ஹரி ஹரி தேவா நமஸ்காரம்**
**ஹரி கிருஷ்ணா தேவா நமஸ்காரம்**
**நரசிம்ம தேவா நமஸ்காரம்**
**நாமரூபா நமஸ்காரம்**
**வரந்தரு வோனே நமஸ்காரம்**
**வைகுந்த தேவா நமஸ்காரம்**
**சிரிரங்கத் தேவா நமஸ்காரம்**
**சிவமாய உதித்த திருமணியே**
**பாரில் பிறந்து இருந்தாலும்**
**பல நூல் அறிந்து தெரிந்தாலும்**
**நீரில் உதித்த கமல மலர்**
**நெறியோ (டு) எடுத்து செபித்தாலும்**
**வாரித்துயிலும் டெழுத்தை**
**வணங்கித் துதித்த மானிடர்குச்**
**சீரிட (டு) அழகாய் வாக் (கு) அருளும்**
**சிவமாய் உதித்த திருமணியே**

இத்தகைய பாடல்களைத் திருமணி மாலை வாசித்தல் என்று அழைக்கின்றனர்.

வைணவ வழிபாடுகளில் நாட்டார் பண்பாட்டு கூறுகள் காரைமடை (கோவை மாவட்டம்) இராமானுசர் கோயிலில் இருளர் போன்ற மலைச் சாதியினர் தங்களுடைய மரபு வழி இசைக் கருவிகளுடன் சாமியாடுகின்றனர். மதுரை அழகர் கோயிலில் சித்திரை திருவிழாவில் கோயிலை சுற்றியுள்ள கள்ளர் ஜாதியினர் கள்ளழகர் வேடம் அணிந்து வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தேவேந்திர வேளாளர் வசிக்கும் கிராமத்தில் திருமால் பூசை, பெருமாள் வழிபாடு என்று வழிபடும் நிலையைப் பார்க்க முடிகிறது. திருமால் பூசை என்பது சைவ படையலுடன் ஊரார் பொதுவாக வழிபடுகின்றனர். மருதன் வாழ்வு கிராமத்தில் ராமசாமி கோயில் கல்உருவம் இல்லாத மண்பீடமாக உள்ளது. இங்கு ராமர், லெட்சுமணனுக்கு ஆடு பலி செய்து வழிபடுகின்றனர். இந்தக் கோயிலை வழிபடும் குடும்பத்தினர் நெற்றில் நாமம் மட்டுமே போட்டுக் கொள்கின்றனர். குறிப்பாக புரட்டாசி மாதம் இத்தகைய வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. இதன் வழியே நாராயணசாமி வழிபாடும் நிகழ்த்தப்படுவதை காண முடிகிறது.

மாட்டு பொங்கல் அன்று தங்கள் கால்நடைகளுக்கு நாமம் போடுவதையும் தங்கள் புதிய வீடுகளில் நாமம் வரைவதையும் வைணவக் குறியீடாகக் காண முடிகிறது. ஊர் மக்கள் இவர்களை நாமக்காரர் குடும்பம் என்று அழைக்கின்றனர்.

திருவைகுண்டம் அருகே உள்ள புளியங்குளம், பகுதி தேவேந்திரகுல மக்கள் ஆதிச்சநல்லூர் தொல்பொருள் இருக்கும் இடத்தில் பாண்டியராசா கோயில் சித்திரை மாதம் வழிபடுகின்றனர். இந்தக் கோயிலில் ராமன், தர்மர், பீமன், அர்ச்சுணன், குந்தி, கர்ணன் இவர்களுடன் சுடலைமாடன் பேச்சியம்மன் வழிபாட்டில் ராமருக்கு ஆடு பலி செய்கின்றனர். இதன் அடிப்படையில் நாட்டார் தெய்வ வழிபாட்டின் கூறுகள், வைணவத் தெய்வத்திற்கும் வழிபடும் முறை அமைந்துள்ளது.

**பெரியசாமி வழிபாடு**

தூத்துக்குடி மாவட்டத்தில் உடன் குடி தாலுகாவில் அமைந்திருக்கும் செட்டியாபத்து ஐந்து வீட்டுச் சாமிகள் வழிபாட்டில் வைணவ முறையில் இங்கு

துளசி, திருமண், புனிதமாக கொடுக்கப் படுகிறது. மேலும் இத்தெய்வ வழிபாட்டை குறிப்பாக, வாதிரியார், தேவேந்திரகுல வேளாளர், நாடார், வண்ணார், அருந்ததியர், முதலியார், நாக்கியர், யாதவர், சமுதாய மக்கள் வழிபாடு செய்கின்றனர். வாய் மொழிக் கதையாக வாதிரியார் இனத்தவர்கள் நெசவு தொழில் செய்து வாழ்ந்த இடம் என்றும் இக்கோயில் தறிகூடமாக இருந்தது என்று கூறுகின்றனர். நாடார் இனத்தவர் இப்பகுதியில் குடி அமர்ந்த உடன் இக்கோயில் அவர்களின் நிர்வாக பொறுப்பில் தற்பொழுது உள்ளது.

**வழிபடும் முறை**

பெரியசாமி வழிபாட்டில் மேளம் கிடையாது. சங்கு, செகண்டி, மணி ஆகியவற்றின் ஒலி இசையில் பூசை நடைபெறுகிறது. அசைவ படையல், அன்னமுந்திரி, திருமண் இத்தகைய வழிபாட்டில் புனிதமாகக் கருதப்படுகிறது. துணை தெய்வமான ஆத்திசாமி, சுடலையின் அவதாரமாக நினைத்து அவருக்குப் பன்றியை பலி செய்கின்றனர். பெரியசாமி வழிபாட்டில் பூசை முறைகள் கீழ்கண்ட மாற்றுப் பெயர்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது இத்தெய்வ வழிபாட்டின் முக்கியக் கூறுகளாக அமைந்துள்ளது.

| வ.எண் | புசை பொருட்கள் | அழைக்கப்படும் மாற்றுப் பெயர் |
|---|---|---|
| 1. | ஆடு | நடையான் |
| 2. | பன்றி | ஆத்தி (கட்டைக்காலன்) |
| 3. | சேவல் | கீரிக்குட்டி |
| 4. | பானை | பாண்டம் |
| 5. | சோறு | அன்னமுந்திரி |
| 6. | அகப்பை | கணக்குபிள்ளை |
| 7. | மாமிசம் | தோசம் |
| 8. | எலும்பு | கரன் |
| 9. | தோல் | சட்டை |
| 10. | முட்டை | அண்டம் |
| 11. | மீன் | மச்சம் |
| 12. | சாராயம் | தீர்த்தம் |
| 13. | திருவிழா | புசைக்கூட்டம் |
| 14. | புசாரி | பணிவிடை |

இக்கோயிலில் சாதி வேறுபாடின்றி எல்லோரும் கருவறை சென்று வணங்கு கின்றனர். ஒருவர் சமையல் செய்த மண் பானையிலேயே அனைவரும் சமையல் செய்கின்றனர். பலி செய்யப்படும் ஆடு, சேவல், பன்றி பெரியசாமியின் பதபால் ஊற்றி காதில் மந்திரம் சொல்லி பலி செய்யப்படுகிறது.

**தனிகோயில்**

வாதிரியார் சமூகம் வாழும் இடங்களில் தங்கள் பொருளாதார வசதிக்கு ஏற்ப பெரியசாமி கோயிலை கட்டியுள்ளனர். சித்திரை மாதம் பெரியசாமியை வழிபடுகின்றனர். அசைவப் படையல் படைத்து வழிபாடு செய்கின்றனர். இந்த வழிபாட்டின் மூலம் வாதிரியார்

இனத்திற்கு இந்த மூலக் கோயில் பூர்வீக இருப்பிடம் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### முடிவுரை

நாட்டார் தெய்வ வழிபாட்டுடன் சைவம், வைணவம் இணைத்து இருப்பது சமயக் கொள்கைகள் அம்மக்களின் மரபுகளுடன் இணைந்து வெளிப்படுவதைக் காண முடிகிறது. தொழில்முறையில் வாதிரியார் இனத்தவர்கள், நெசவு தொழில் செய்கின்ற வகையிலும் பட்டு நெசவுத் தொழில் செய்யும் சௌராஷ்ட்டிர இனத்தவரும், வைணவ வழிபாட்டில் பெரும்பங்கு வகிக்கின்றனர். அதன் அடிப்படையிலும் வைணவத் தாக்குதல் இந்த சமூகத்தை உள் வாங்க வைத்திருக்கலாம். ஒவ்வொரு சமயம் தனது அடையாள குறிகளை வைத்துக் கொண்டாலே அது அவர்களின் சமய அடையாளமாக இருப்பதைக் காண முடிகிறது. தொழில் இடப்பெயற்சி மூலமும் சமய அடையாளம் ஒவ்வொரு பண்பாட்டிலும் அதன் தாக்குதல் வெளிப்படும் என்பதை ஆய்வுகளில் காண முடிகிறது.

### துணை நின்ற நூல்கள்

1. முனைவர் அ.தட்சிணாமூர்த்தி 1994 தமிழர் நாகரிகமும் பண்பாடு, யாழ் வெளியீடு சென்னை.
2. தே.லூர்து 1997 நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.
3. நா.வான்மாமலை 1975 மக்களும் மரபுகளும் நியூ செஞ்சுரி புக் பிரைவேட் லிமிடெட், சென்னை.
4. மரபுகளும் நியூ செஞ்சுரி புக் பிரைவேட் லிமிடெட், சென்னை.
5. ஆ.செல்லபெருமாள் 1998 சமூக மாணிடவியல் இலக்கிய தேடல், திருநெல்வேலி.
6. தொ.பரமசிவன் 1995 தெய்வங்களும் சமூக மரபுகளும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
7. முனைவர் ஆ.பத்மநாபன் 1992 சமத்துவம் நாடிய சான்றோர் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
8. ஐந்துவீட்டு சுவாமி திருக்கோயில் 1999 ஸ்தலவரலாறு தேவஸ்தான வெளியீடு செட்டியாபத்து.